மூலம் அந்தப் பகுதி வாய்க்கால்களை அகலப்படுத்தி விரிவுபடுத்தி ஒரு தனித்திட்டத்தை சிறப்புத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவதற்கு முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கால்வாய் கொள்ளளவிற்குத் தக்கபடிதான் நீர் கொடுக்கமுடியும், அதைத் தாண்டிக் கொடுக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவர். ஆனால் இப்போது அவர்கள் சொல்கிற பிரச்சினை வேறு. அதைத் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் அது குறித்து அரசாங்கம் ஆய்வு செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : தற்போது தனி அதிகாரிகள் மூலம் அந்த வாய்க்கால்களில் அதிகமான தண்ணீர் விடுவதற்கு சிறப்புத் திட்டத்தை, தனிக்கவனத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதுதான் அரசின் கவனத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசாங்கம் கவனத்தைச் செலுத்தும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, *1970–71, 1971–72* மற்றும் *1972–73* ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஒன்பதாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றி, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.